# திருக்குடவாயில் தல வரலாறு



12792

வர ஸ்வாமி தேவஸ்தான வெளியீடு

## அறங்காவலர்கள் குழு

திரு. R. சுந்தரமூர்த்தி முதலியார்

,, R. வெங்கடாசல உடையார்

,, S. முத்துக்கிருஷ்ண தேவர்

“ V. S. ஷண்முகவேல் அதியமார்

,, K. S. ராமசாமி

(தலைவர், அறங்காவலர் குழு)

★

N. சுப்பிரமணியன்

இறைபணியாளர்

★

1970

உ
சிவமயம்

# திருக்குடவாயில் தல வரலாறு

புலவர்மணி, வித்துவான்
திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களால்
தொகுக்கப்பெற்றது.

10-6-70 கும்பாபிஷேகத்தன்று
திரு. சி. கிருஷ்ணமூர்த்தி, எம். எல். ஏ.,
அவர்கள் தலைமையில்

தமிழ்நாடு அரசு அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா
அவர்களால் வெளியிடப்பட்டது.

பதிப்பு உரிமையுடையது]

{ சாதாரண ஹு
{ வைகாசிமீ 27உ

முதற் பதிப்பு, 1970

# திருநாவுக்கரசர் தேவாரம்

## அடைவு திருத்தாண்டகம்
(பாட்டு எண் 7)

திருச்சிற்றம்பலம்

கடுவாயர் தமைநீக்கி யென்னை யாட்கொள்
கண்ணுதலோன் நண்ணுமிடம் அண்ணல் வாயில்,
நெடுவாயில் நிறைவயல்சூழ் நெய்தல் வாயில்
நிகழ்முல்லை வாயிலொடு ஞாழல் வாயில்,
மடுவார்தென் மதுரைநக ரால வாயில்
மறிகடல்சூழ் புனவாயில் மாடம் நீடு,
குடவாயில் குணவாயி லானவெல்லாம் புகுவாரைக்
கொடு வினைகள் கூடா வன்றே.

கமர்ஷியல் பிரின்டிங் அண்டு பப்ளிஷிங் அவுஸ், சென்னை-1.

உ

சிவமயம்

# முகவுரை

குடவாயில் என்னுந்தலம் சோழநாட்டில் காவிரியின் தென் கரையிலுள்ள 127 பாடல்பெற்ற சிவத்தலங்களில் ஒன்று திருஞானசம்மந்தர் சுவாமிகளுடைய பதிகங்கள் இரண்டும் (இருபது பாடல்கள்), திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய அடைவுத் திருத்தாண்டகத்தில் ஒரு பாடலும், அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்புகழ் பாடல்கள் இரண்டும் பெற்றது. கும்பகோணத்திலிருந்து திருவாரூர் போகும் வழியில் கும்பகோணத்திற்கு தென் கிழக்கே 12 மைல் தொலைவிலும் திருவாரூருக்கு வடமேற்கே 13 மைல் தொலைவிலும் உள்ளது இத்தலம்.

இத்தலத்தை 1932-ம் ஆண்டு மே மாதம் 14-ந் தேதியிலும், நவம்பர் மாதம் 4-ந் தேதியிலும் சிவத்தல மஞ்சரி என்ற நூலை எழுதிய ஓய்வு பெற்ற முன்சீப் திரு. வ. சுப்பிரமணிய பிள்ளைஅவர்கள் குமாரர் உயர்திரு. வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் வந்து தரிசித்தபோது, அவருக்கு திருவாளர் தியாகராஜ சுவாமிநாத முதலியார் அவர்கள் தாம் கையெழுத்து பிரதியாக வைத்திருந்த குடவாயில் வடமொழி புராண வசனத்தை அச்சிடும்படி கொடுத்திருந்தார்கள். வேறு ஒரு வசன பிரதியும் அவருக்கு கிடைத்தது. அவற்றின் உதவிக் கொண்டு 1937ம்ஞ மார்ச்சு மாதம் திருக்குடவாயில் புராணத்தை உயர்திரு. வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் வடமொழியிலிருந்து தமிழ் மொழியில் மொழி பெயர்த்து அச்சிட்டு உதவியுள்ளார்கள்.

அந்நூலின் உதவிகொண்டு இத்தலவரலாறு வெளியிடப்படுகிறது. இதை புலவர்மணி வித்வான் மு. ரெத்தின தேசிகர் அவர்கள் நல்ல தமிழ் நடையில் தொகுத்து கொடுத்து இருக்கிறார்கள். பதினைந்து அத்தியாயங்கள் கொண்ட தொண்ணூற்று நான்கு

பக்கங்கள் கொண்ட இந்த திருக்குடவாயில் புராணத்தை மிகவும் சுருக்கமான தல வரலாருக தயாரித்துக் கொடுத்த புலவர் மணி வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர் அவர்களுக்கு, இந்த தேவஸ்தான அறங் காவலர்கள் சார்பிலும், இறை பணியாளர் சார்பிலும், இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த தல வரலாற்றை வெளியிட வேண்டுமென நான் வேண்டிக்கொண்டபொழுது, தட்டாமல் தடை எதுவும் சொல்லாமல் கும்பாபிஷேக நன்னாளில், குடவாயில் வந்து தல வரலாற்றை வெளியிட ஒப்புக் கொண்ட தமிழ்நாடு அரசு, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, பி.ஏ., அவர்களுக்கு, எங்கள் அனைவரின் நன்றியை செலுத்திக் கொள்கிறோம்.

*28-8-1921*ல் நடந்த கும்பாபிஷேகத்திற்குப் பிறகு நாற்பத்து ஒன்பது ஆண்டுகள் கழித்து இப்போது *10-6-70*ல் நடக்கும் இந்த மகா கும்பாபிஷேகத்திற்கும், இந்த தல வரலாற்றை வெளியிடுவதற்கும், எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து உதவிய குடவாசல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. கிருஷ்ண மூர்த்தி, எம். எல். ஏ., அவர்களுக்கும், ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ. ஏ. எஸ். அவர்களுக்கும், தஞ்சை துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு, பி.ஏ.பி.எல். அவர்களுக்கும், நாகப்பட்டிணம் உதவி ஆணையர் திரு. பி. புலியூர் உடையான் அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு உறு துணையாக இருந்த ஏனைய அறங்காவலர்களுக்கும், இவ் வாலய இறைபணியாளருக்கும், மற்ற எல்லா உதவி யையும் செய்து அருளிய எல்லா அன்பர்களுக்கும், நண்பர்களுக்கும், எனது உளங்கனிந்த நன்றி.

இங்ஙனம்,

**கே. எஸ். ராமசாமி**
**தலைவர்**
**அறங்காவலர் குழு.**

**ஸ்ரீ கோணேஸ்வர ஸ்வாமி**
**தேவஸ்தானம்**
**குடவாயில்**
**10—6—70.**

உ

சிவமயம்

# திருக்குடவாயில் தல வரலாறு

## மூர்த்தி, தலம், தீர்த்தம்

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''

என்பது தாயுமான சுவாமிகளின் திருவாக்கு. இவ்வாக்கிற்கு இணங்க, நம் தமிழகத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்த இடங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று திருக்குடவாயில். இதன் பெருமையினை முதற்கண் சூதமுனிவர், நைமி சாரணியத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கு வகுத்துக் கூறினர். இத்தலத்தின் பெருமை முதற்கண் அமிர்தகுடத்தின் அடிப்படையில் தோன்றிற்று. ஆதலால் இது அமிர்ததலம் எனப் பெறுகின்றது. மகாஸ்காந்த புராணத்தில் இத்தலத்தின் பெருமை கூறப்பெற்றுள்ளது.

இத்தலம், கிழக்குக் கடலுக்கு மூன்று காதவழி மேற்கிலும், காவிரியாற்றிற்கு ஒரு காதவழி தெற்கிலும், பிரம நதிக்கு இரண்டு நாழிகைவழி தெற்கிலும் அமைந்துள்ளது. இதன் வாயு மூலையில் இரண்டு நாழிகை வழியில் திருச்சேறை என்கின்ற சிவத்தலம் (வைணவத் தலமும்) இருக்கின்றது. இதன் வடமேற்கில் வசிட்டர் ஆச்சிரமம் இருக்கின்றது. இதன் அக்னி மூலையில் கரவீரம் என்ற சிவத்தலம் இருக்கின்றது. இவற்றை அடுத்து இன்னும் பல சிவத்தலங்கள் உள்ளன.

அமிர்ததலமாகிய இத் திருக்குடவாயிலை ஒருவன் நினைத்தாலே சிவனாகிவிடுகிறான். இத் தலத்தை அடைய ஒரு அடி எடுத்து வைத்தாலே வீடு கைகூடுகிறது. ஒரு நொடிப்பொழுதேனும் இத் தலத்தில் வசிப்பவன்

சங்கரனுகி விடுகிருன். பிருகத் துர்க்காம்பிகையின் பதி யாகிய கோணேசனே சனிப் பிரதோஷத்தில் பூசித்தால் சிவசாரூப்பயம் (சிவனுடைய வடிவை அடைதல்) அடையலாம். கார்த்திகை மாதம் திங்கட்கிழமையில் பூசிப்பவர்கள், சிவபெருமானேடு இரண்டறக் கலப் பார்கள். தாலப்யர் என்ற முனிவர் இத் தலத்தே மந்தார மரத்தின்கீழ் இருந்து தவம் செய்து வீடு அடைந்தார்.

இறைவன், உயிர்களின் நலம் கருதிப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத் தொழில்களையும் இடைவிடாது எல்லையில்லா விளையாட்டுகளாகச் செய்து கொண்டிருக்கிருன். இறைவன் ஒரு முறை அனைத்துல கங்களையும் அழித்தபொழுது, உயிர்கள் அனைத்தையும் அமிர்தகுடத்தில் இட்டு, மீண்டும் படைப்புத் தொழிலைச் செய்ய பிரம, விஷ்ணு, உருத்திரர் என்ற மூவர் ஆயினுன். * அமிருதகுடத்தின் வாயிலில் (முகத்தில்) சிவலிங்க மாயினுன். அமிருத துளி விழுந்த இடம் அமிர்ததலம் ஆயிற்று. அமிருத நீர் முழுவதும் தேங்கிய இடம் அமிருத தீர்த்தம் ஆயிற்று. காலம் செல்லச் செல்ல அமிருத குடத்தின் வாயிலில் உண்டான இலிங்கத்தின்மீது புற்று மூடிவிட்டது. கருடன் ஒரு முறை ஒரு காரணம் கருதி அமிருதகுடத்துடன் இத் தலத்தில் வந்து தங்கினுன். அப்பொழுது அங்கே தவம் செய்து கொண்டிருந்த மகா பயங்கான் என்ற அசுரன் அமிருதகுடத்தைப் பெறக் கருடனுடன் சண்டையிட்டான். கருடன் அசுரனுடன் சண்டையிட அமிருத குடத்தை அங்கிருந்த புற்றின்மீது வைத்துப் பின்னர் எடுக்க வந்தபொழுது, குடம் புற்றினுள் மறைந்ததை உணர்ந்தான். புற்றினைத் தன் மூக்கினுல் பிளந்தான். இறைவனது இலிங்க உருவினைக் கண்டு வியந்து மகிழ்ந்து வணங்கித் தன் குற்றத்தினைப் பொறுக்க வேண்டினுன். பின்னர்த் தன் அமிர்தகுடத்தினைத் தந்தருள வேண்டினுன். இறைவன் அங்ஙனமே தர, கருடன் அதனைப் பெற்று மீண்டும் இறைவனை வணங்கித் தன் தாயாகிய விநதையின் துன்பத்தினை நீக்கச் சென்ருன். அன்றுமுதல் இத்தலம் வன்மீகாசலம் என்று வழங்கலாயிற்று. இறைவன் வன்மீகாசலேசர் எனப் பெற்ருர்; கருடனுல் வெளிப்பட்டமையால்

---

* குடவாசல் என்ற பெயர்க்காரணம் இதனுல் விளங்குகிறது.

கருடாத்ரி எனப் பெற்றார். அமிருதகுடத்தைக்கொண்டு, அமிருதலிங்கேசர், சுதாகடபதி என அழைக்கப் பெறு கிறார். சூரியனால் பூசிக்கப்பெற்றமையால் சூரியேசுவரர் எனப் பெறுகின்றார்.

மாசி பௌர்ணமியில் அமிருத தீர்த்தத்தில் மூழ் கினோர் பிறவிநீங்கி வீடுபெறுவர். இத்தலத்துக் கட்டு மலையின் இருபத்துநான்கு படிகளையும் ஏறி இறைவனை வணங்குவோர், கைலைமலையில் ஏறும் பலனை அடைவர். இத்தலத்தில் உள்ள அமிருததீர்த்தம், சந்திரதீர்த்தம், பிரமதீர்த்தம், சூரியதீர்த்தம், அக்நிதீர்த்தம் என்பவற்றில் நீராடுவோர் எல்லாப் பாவங்களும் நீங்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் பெறுவர்.

## கருடனும் அமிருதகடமும்

திருப்பாற்கடலில் கிடைத்த அமுதம் தேவர் உலகில் ஒரு குடத்தில் வைத்துக் காக்கப்பெறுவது. ஆனால் சர்வ லோகநாயகனாகிய சிவபெருமான், கைலாச உருவமான ஒரு குடத்தில் தன் உருவான அமிருதத்தை நிறைத்து வைத்தார். உலக அழிவினால் உயிர்கள் தவித்தகாலையில் அவ்வுயிர்களை அந்த அமிருதகுடத்தில் நிறைத்து மீண்டும் படைத்தல் தொழிலைச் செய்யும்பொழுது அவ் வுயிர்களை உலகில் வாழச் செய்ய எண்ணியிருந்தார். படைப்புத் தொழில் தொடங்கவே குடம் மூன்றாக உடைந்தது. முதற் பாகமாகிய அடிப்பாகம் காவிரியின் தென்கரையில் விழுந்தது. அந்த இடத்தில் இறைவன் அருஉருவத் திருமேனியாகிய இலிங்க வடிவம் கொண்டு ஆதி கும்பேசுரர் என்ற திருநாமத்துடன் விளங்கினார். இவ்விடமே கும்பகோணம். குடத்தின் நடுப்பாகம் இந்த இடத்திற்குத் தென் கீழ்த்திசையில் விழுந்தது. அங்கு இறைவன் கடேசுரர் என்ற திருநாமத்துடன் விளங் கினார். (இப்பொழுது இந்த இடத்தின் பெயர் கலைய நல்லூர்) இதற்கு ஆறுமைல் தென் கீழ்த்திசையில் குடத்தின் முகப் பாகம் (வாயில் பாகம்) விழுந்தது. இங்கு கோணேசுரர் என்ற பெயருடன் இறைவன் விளங்குகிறார். இந்த இடம் குடவாயில் எனப் பெறு கின்றது.

இந்தத் திருப்பதிக்குக் கருடன் தெய்வ உலகத்தி லிருந்த அமிருத குடத்துடன் வந்த வரலாறு பின் வருமாறு அமைகிறது.

காசிபமுனிவரின் முதல் மனைவி விநதை. இவ்விரு வருக்கும் மகவாகப் பிறந்தவரே கருடன். கருடன் திருமாலுக்குத் தொண்டு செய்து பெரிய திருவடி என்று அழைக்கப் பெறுகிறார். (அநுமன் சிறிய திருவடியாவார்) காசிபரின் இளைய மனைவி சத்துரு. இவள் பிள்ளைகள் பாம்புகள், தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த காலையில் அதிலிருந்து உச்சைச்சிரவம் என்ற குதிரை தோன்றிற்று. இதனை இந்திரன் தன் வாகனமாகக் கொண்டான். விநதையும்—சத்ருவும் ஒருமுறை இந்த உச்சைச்சிரவம் என்ற குதிரையைக் கண்டார்கள். விநதை சத்ருவிடம் "தங்காய்! இக்குதிரை எவ்வளவு வெண்மையாக இருக்கிறது பார் என்றாள். சத்ரு ஆமாம். உடல் வெண்மைதான், வால் கறுத்திருக்கிறது" என்றாள். விநதை "இல்லை அப்படி அதன் வால் கறுத் திருக்குமானால் நான் உனக்கு அடிமை ஆகிறேன் என்றாள். அவ்விடம் விட்டுச் சிறிது பொழுது சத்ரு நீங்கிச் சென்று தன் பிள்ளைகளாகிய பாம்புகளிடம் விநதைக்குத் தெரியாதபடி அந்தக் குதிரையின் வாலுக்கு நஞ்சு ஊட்டிக் கறுக்கச் செய்தாள். இருவரும் குதிரையின் பக்கத்தில் சென்று பார்க்க வால் கறுத்திருக்கக் கண்டனர். விநதை சத்ருவுக்கு அடிமையானாள். கருடனும் அடிமையானான். சத்துருவின் குழந்தை களாகிய பாம்புகளைத் தூக்கி அலைந்தான்.

இந்த அடிமைத்தனம் நீங்க விநதை தேவருலகில் உள்ள அமிருத குடத்தைத் தன்னிடம் கொண்டுவந்து கொடுக்க வேண்டுமென்றாள். கருடன் விரைந்து தேவருலகம் சென்று பெரும் போர் விளைத்து அந்த அமிர்த குடத்தைக் கொண்டு வந்தான். வரும் வழியில், இந்தத் தலத்தை அடைந்தான். கோணேசுரர் புற்றால் மூடப்பட்டிருந்ததை அறியாது அப்புற்றின்மீது அமிர்த குடத்தை வைத்து மகா பயங்கரனுடன் சண்டை யிட்டான். மீண்டும் இறைவனருளால் அந்த அமிருத குடத்தைப் பெற்று சத்துருவின்முன் தருப்பைப் புல்லின் மீது வைத்தான்: இந்திரனது ஆணையால் வாயு தேவன்



ஸ்ரீ கருடாழ்வார்



ஸ்ரீ கோணேஸ்வர ஸ்வாமி கோயில்

அக்குடத்தை மீண்டும் தேவருலகிற்கு எடுத்துச் சென்றார். சத்ரு தனக்கு அமிருதம் கிட்டாததை உணர்ந்து அக்குடம் இருந்த தருப்பைப் புல்லில் அமிருதம் சிந்தியிருக்குமெனக் கருதி நாவினால் நக்கினாள். அவள் குழந்தைகளாகிய பாம்புகளும் நக்கின. தருப் பையின் கூர்மை அவர்கள் நாக்கினை இரண்டாக அறுத்துவிட்டது. அதனால்தான் இன்றும் பாம்புகளுக்கு நாக்குப் பிளவுபட்டிருக்கின்றது.

## அமிர்த தீர்த்தக் கரையில் ஆதிகஜாநநர்:

இறைவன் உயிர்களின் நன்மைக்காக ஆக்கிய அமிருத குடத்திலிருந்து கீழே அமிருதம் சிந்திய இடமே இக்குடவாயில் என்னும் திருப்பதியில் கோவிலின் எதிரில் அமிர்த தீர்த்தமாக விளங்குகிறது. இந்தத் தீர்த்தத்தின் கீழக்கரையில் வீற்றிருப்பவரே ஆதிகஜாநநர் என்னும் விநாயகர் ஆவார்.

ஒரு சமயம் உமாதேவி தான் குளிக்கும் அறையின் வாயிலில் தன் மூத்த மகனாகிய பிள்ளையாரைக் காவல் வைத்துவிட்டுக் குளித்தார். சிவபெருமான் அங்கே வந்தார். காவலிருந்த பிள்ளையார் தன் தந்தையாரை உள்ளே செல்லாது தடுத்தார். சிவபெருமான் சினந்து பிள்ளையாரின் தலையைக் கிள்ளி எறிந்துவிட்டு உள்ளே சென்றார். உமாதேவியார் நடந்ததை அறிந்து வருந் தினார். தன் மகன் மீண்டும் உயிர் பெற்றெழ இறை வனிடம் வேண்டினார். இறைவன் கிள்ளி எறிந்த தலை இனி உதவாது. வேறு தலை ஒன்றைப் பொருத்தினால் உன் மகன் உயிர்பெற்று எழுவான் என்றார். மாணி பத்திரன் என்பான் ஒரு தலையைக் கொண்டுவர பதினான்கு உலகங்களிலும் அலைந்தான் தலை கிடைக்க வில்லை. சிவபெருமான் வடக்கே தலை வைத்துக் தூங்கு கிறவன் தலையைக் கொண்டுவரப் பணித்தார்; மாணி பத்திரனுக்கு வடக்கே தலை வைத்துத் தூங்குபவர் தலை அகப்படவில்லை. ஒரு மதயானை வடக்கே தலை வைத்துத் தூங்குவதைக் கண்டு அதன் தலையைக் கொண்டு வந்து பொருத்தினான். விநாயகர் யானைத் தலையுடன் எழுந்தார். சிவபெருமான் விநாயகருக்கு அனேக வரங்களைக் கொடுத்து ஆதிகஜாநநர் என்ற திருப்பெயருடன்

கோணேசர் எழுந்தருளியுள்ள இத் திருப்பதியில் அமிர்த தீர்த்தத்தின் கீழ்க் கரையில் வீற்றிருக்கச் செய்தார். இந்த விநாயகருக்கு சித்திரைப் பருவத்தில் பூஜை செய்வது பெரும் பலனைத் தரும்.

## கருடன் ஆலயம் எடுத்துப் பெருவிழா நிகழ்த்தியது

கருடன் கோணேசரது ஆணையால் அவருக்குக் குடவாயிலில் குடக்கு (மேற்கு) நோக்கிய வாயிலையுடைய ஆலயம் எடுத்தான். பரிவார தேவதைகளையும் அங்கங்கே நிறுவினான். ஆதி கணபதிக்கும் கோயிலின் முன்பாக ஆலயம் அமைத்தான். சுவாமி சந்நிதியில் ஏறுவதற்குப் படிகளைக் கட்டி அப்படிகளுக்குத் தேவர்களைக் காவல் வைத்தான். நந்தவனம் அமைத்தான். பூஜைக்கு வேண்டிய மற்றவற்றையும் அமைத்துத் தந்தான். ஐந்து மூர்த்திகளுக்கும் தேர்களை அமைத்தான். மாசி மாதத்தில் பெருவிழா நிகழ்த்த ஏற்பாடுகள் செய்தான். மற்ற மாதங்களிலும் விழாக்கள் நடத்தத் திட்டம் அமைத்தான்.

## கோணேசருக்குப் பால் காவடி எடுத்தலின் சிறப்பு

ஒருவன் முன்னொரு காலத்தில் ஐந்து நாள் கோணேசருக்குப் பால் காவடி எடுத்துச் சிவரூபத்தை அடைந்தான். அவன் பாஹ்லிகம் என்னும் தேசத்தில் பிறந்த ஓர் அந்தணன் ஆவான். அவன் பெயர் பாவனன் என்பது. இவன் அந்தணனாய்ப் பிறந்தும் மேலோரை அவமதித்தான். பத்தினிப் பெண்டிரை அவமதித்தான். சிரார்த்தத்தில் ஓரிடத்தில் புசித்துவிட்டு மற்றொரு வீட்டிலும் புசித்தான். இப்படி எண்ணற்ற பாவங்களைச் செய்து வந்தான். பல துன்பங்களை அடைந்த அவன் ஒருவாறு கோணேசரை நினைந்து சனிப்பிரதோஷ நாளில் கோணேசரை அடைந்து வணங்கினான். சிறிது நல்லறிவு வரவே கோணேசருக்கு ஐந்து நாள் பாற்காவடி எடுத்து, ஐந்தாம் நாள் இரவு சிவலோகமடைந்து சிவபெருமானுடன் கலந்தான்.

## தலவிருக்ஷமும் தவம் செய்த முனிவர்களும்

பிருகு, தாலப்பியர் என்ற முனிவர்கள் இந்தத் தலத்தே தவம் இயற்றி முத்தி பெற்றூர்கள். பிருகு பூசித்ததால் இத்தலத்து ஈசன் பிருகுநாதன் என்றும், தாலப்பியர் பூசித்ததால் தாலப்பியநாதர் என்றும் அழைக்கப் பெறுகிறூர். தாலப்பியர் தவமியற்ற வந்த பொழுது, இங்கிருந்த அமிருத தீர்த்தத்தையும், அதன் அருகிலிருந்த புற்றையும், அதன் மேற்கில் இருந்த மந்தார மரத்தையும் கண்டார். அந்த மந்தார மரமாம் முதலில் தனி மரமாக இருந்து பின் வாழைத் தோட்டமாக மாறியது. அவ்வாழைத் தோட்டம் மந்தார வனமாக மாறியது. பின் அந்த மந்தார வனமே வில்வ வனமாகவும் சண்பக வனமாகவும் யுகம் தோறும் மாறி அமைந்தது. பிருகுவும் தாலப்பியரும் இவ்வாறு இத் தலத்தில் வசித்துச் சிறப்படைந்தார்கள். தல விருட்சங்களின் மகிமையும் விளங்கிற்று. தாலப்பியர் இங்கே ஒரு தீர்த் தத்தையும் உண்டாக்கினூர். அது தாலப்பிய தீர்த்தம் என வழங்கப்பெற்றது. முன் கூறியவண்ணம் இறைவனுல் வைக்கப்பெற்ற அமிருதகுடம் உலகப் படைப்பின் பொழுது உடைய அதன் ஒரு கூறு தாலப்பிய முனிவர் பூசித்த லிங்கத்தில் ஒன்றுபட்டதால் தாலப்பியேச ருக்குக் கோசணர் என்ற பெயர் உண்டாயிற்று.

இத் தலத்தே அமைந்துள்ள அமிருத தீர்த்தத்தில் பிரசண்டன் முதலிய கொடியவர்கள் முழுகிப் பாவம் நீங்கினர். இந்த அமிர்த தீர்த்தமேயன்றிச் சந்திர தீர்த்தம் முதலியவைகளும் இத் தலத்தே சிறந்து விளங்குகின்றன. எனவே, மூர்த்தி—தலம்—தீர்த்தம் என்ற மூன்றூலும் சிறந்து விளங்குவது குடவாயில்.

## சங்க காலக் குடவாயில்

இற்றைக்கு 1,800 ஆண்டுகட்குமுன் தமிழகத்தில் குடவாயில் சிறந்த இடம் பெற்றிருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் பல கிடைக்கின்றன. சோழன் கோச்செங்கணூன், சேரமான் கணைக்காலிரும் பொறையுடன் சண்டையிட்டு வென்ற செய்தி. புறநானூறு, களவழிநாற்பது என்னும் சங்ககால இலக்

இயங்களால் அறியப்படுகின்றது. சோழன் தான் வென்று சிறைப்படுத்திய சேரனைக் குடவாயிற் கோட்டத்துச் சிறை வைத்தான் என்பது "குழவி பிறப்பினும்" என்ற புறப்பாட்டின் அடிக் குறிப்பால் அறியக் கிடக்கின்றது. எனவே அன்றைய குடவாயில் சோழப் பேரரசின் சிறைக் கோட்டமாய் இருந்ததென்பது புலனாகின்றது.

குடவாயில் கீரத்தனார்—குடவாயில் நல்லாதனார் என்ற புலவர்கள் பாடிய பாடல்கள் அகநானூறு முதலிய சங்ககால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. குடவாயில் கீரத்தானார் பாடிய அகப்பாட்டின் சில வரிகள் பின்வருமாறு

"கொற்றச் சோழர் குடந்தைவைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுத்துவள் அறனில்யாயோ"

ஈண்டு குறிக்கப்பெறும் "குடந்தை" என்னும் சொல் குடவாயில் என்பதன் மரூஉ என்பது ஆன்றோர் துணிபு. இவ்வடிகளின் பொருள் சோழர்கள் நாட்டில் திரட்டிய பொருள்களைக் குடவாயில் கருவூலத்து வைத்துக் காத்த காவலைவிட மிக்கடிய காவலில் நன்றாய் தலைவியை கல்லுள் வைத்துக் காவல் புரிவாள் என்பது. இதனால் சங்ககாலத்தே குடவாயில் சோழர்களின் கருவூல நிலைய மாக இருந்த செய்தி அறியப்படுகிறது.

---

## ஆதிகஜாநநர் துதி

சீதள வுந்தியு மதியுஞ் சேர்ந்துகமழ்ந்
திடுமிதழிச் சிவனஞ் சேல்போற்
காதளவும் விழியிடத்தாள் களித்திடச்செய்
பணிகொண்டு கவினுஞ் சோலைத்
தாதளவு குடவாயிற் றலத்தமிழ்த
நதிக்கரைமேற் றங்குந் தந்தி
மாதளவுந் திருத்தாட்டா மரைமலரை
யென்னுள்ளும் வணக்கஞ் செய்யலாம்.

## விநாயகர்

பொற்ற ருக்கணெண் ணுளன்திரு மான்முதல் போற்றுங்
கற்ற வர்ப்பிரா னுறைகுட வாயில்மான் மியங்கா
முற்று ரைக்க வவ் வரியரி யறமுனிப் பயங்கொண்
டெற்று மாமுக னிணைப்பத மலரிறைஞ் சிடுவாம்.

---

பின்வரும் பாடல்கள் இனி அச்சாக வேண்டிய செய்யுட் புராணத்தி னின்றும் எடுக்கப்பட்டன :

## காப்பு

வானைமுகந் தெழும்பூக மடல்விரிந்து
குடக்கனிமேல் வழிந்தி டுஞ்செந்
தேனைமுகந் தளிமுரலுங் குடவாயிற்
கோணேசன் செம்ம லன்ப
ரூனைமுகந் துழல்பிறவி வெப்பகற்றக்
குழைச்செவியி னுறுகாற் செய்யு
மானைமுகப் பிள்ளையா ரடிக்கமல
முடிசூட்டி யன்பு கூர்வாம்.

## கோணேசர் வணக்கம்

சீர்கொண்ட வெளிமுகடு கடந்தண்டத்
தப்பாலாய்ச் சித்தாந் தத்தின்
வேர்கொண்ட பேரொளியாய்ச் சின்மயமா
யகண்டமாய் விமல மாகிப்
பேர்கொண்ட நாதமாய் விந்துவா
யைந்தொழிலும் பிறங்கச் செய்து
பார்கொண்ட குடவாயி லமர்ந்தகோ
ணேசர்பதம் பணிந்து வாழ்வாம்.

## பெரிய நாயகியம்மை

பரையாகி யிச்சாஞா னங்கிரியை
யதிகாரப் பான்மை யெய்திப்
புரைதீர்ந்து விந்துமோ கினியொடுமா
னனைத்துலகும் பொருந்தச் சார்ந்து
கரைதீர்க்குஞ் சமயவித சத்தியமாய்க்
காணமுக்கட் கடவு ளாகித்
தரைமேவுங் குடவாயில் வரும்பெரிய
நாயகிதா டலைமேற் கொள்வாம்.

## முருகக் கடவுள்

ஆறிரண்டு மலர்க்கண்ணு மாறிரண்டு
திருக்கையு மரவிந் தம்போற்
கூறிரண்டு சேவடியும் முடியாறும்
படைத்தமரர் கோனுக் காக
மாறிரண்டு கொண்டிருந்த மனத்தோடு
கீழ்மேலாம் வன்சூர் மாவை
வேறிரண்டு கூறுபட வேலெறிந்த
குமரனடி விரும்பி வாழ்வாம்.

௳

சிவமயம்

## திருஞானசம்பந்த ஸ்வாமிக ளருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

---

## I. பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திகழுந் திருமா லொடுநான் முகனும்
புகழும் பெருமான் அடியார் புகல
மகிழும் பெருமான் குடவாயில் மன்னி
நிகழும் பெருங்கோயி னிலாயவனே. 1

ஓடுந் நதியும் மதியோ டுரகம்
சூடுஞ் சடையன் விடைதொல் கொடிமேல்
கூடுங் குழகன் குடவா யில்தனில்
நீடும் பெருங்கோயி னிலாயவனே. 2

கலையான் மறையான் கனலேந்து கையான்
மலையா ளவள் பாகம் மகிழ்ந்த பிரான்
கொலையார் சிலையான் குடவா யில்தனில்
நிலையார் பெருங்கோயி னிலாயவனே. 3

சுலவுஞ் சடையான் சுடுகா டிடமா
நலமென் முலையாள் நகைசெய்ய நடம்
குலவுங் குழகன் குடவா யில்தனில்
நிலவும் பெருங்கோயி னிலாயவனே. 4

என்ற னுளமேவி யிருந்த பிரான்
கன்றன் மணிபோல் மிடறன் கயிலைக்
குன்றன் குழகன் குடவா யில்தனில்
நின்ற பெருங்கோயி னிலாயவனே. 5

அலைசேர் புனலன் அனலன் அமலன்
தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
கொலைசேர் படையன் குடவா யில்தனில்
நிலைசேர் பெருங்கோயி னிலாயவனே. 6

அறையார் கழலன் அழலன் இயலின்
பறையாழ் முழவும் மறைபாட நடம்
குறையா வழகன் குடவா யில்தனில்
நிறையார் பெருங்கோயி னிலாயவனே. 7

வரையார் திரடோள் அரக்கன் மடிய
வரையார வொர்கால் விரல் வைத்த பிரான்
வரையார் மதில்சூழ் குடவா யில்மன்னும்
வரையார் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 8

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோயில் மகிழ்ந்தவனே. 9

வெயிலின் நிலையார் விரிபோர் வையினர்
பயிலும் உரையே பகர் பாவிகள்பால்
குயிலன் குழகன் குடவா யில்தனில்
உயரும் பெருங்கோயி லுயர்ந்தவனே. 10

கடுவாய் மலிநீர் குடவா யில்தனில்
நெடுமா பெருங்கோ யில்நிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன்
வடமார் தமிழ் வல்லவர் நல்லவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

## II. பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கலைவாழும் அங்கையீர் கொங்கை யாருங் கருங் கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையில் அரவும் பிறையும் அமர்வித்தீர்
குலைவாழை கமுகம் பொன் பவளம் பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே கோயிலாக நின்றீரே. 1

அடியார்ந்த பைங்கழலுஞ் சிலம்பும் ஆர்ப்ப அங்கையிற்
செடியார்ந்த வெண்டலை யொன் றேந்தி யுலகம் பலிதேர்வீர்
குடியார்ந்த மாமறையோர் குலாவி யேத்துங் குடவாயில்
படியார்ந்த கோயிலே கோயிலாகப் பயின்றீரே. 2

கழலார்பூம் பாதத்தீர் ஓதக் கடலில் விடமுண்டன்
றழலாருங் கண்டத்தீர் அண்டர்போற்றும அளவினீர்
குழலார வண்டினங்கள் கீதத் தொலிசெய் குடவாயில்
நிழலார்ந்த கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 3

மறியாருங் கைத்தலத்தீர் மங்கைபாக மாகச்சேர்ந்
தெறியாரும் மாமழுவும் எரியு மேந்துங் கொள்கையீர்
குறியார வண்டினங்கள் தேன் மிழற்றுங் குடவாயில்
நெறியாருங் கோயிலே கோயிலாக நிகழ்ந் தீரே. 4

இழையார்ந்த கோவணமுங் கீழும் எழிலார் உடையாகப்
பிழையாத சூலம் பெய் தாடல் பாடல் பேணினீர்
குழையாரும் பைம்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த குடவாயில்
விழவார்ந்த கோயிலே கோயிலாக மிக்கீரே. 5

அரவார்ந்த திருமேனி யான வெண்ணீ றாடினீர்
இரவார்ந்த பெய்பலிகொண் டிமையோ ரேத்த நஞ்சுண்டீர்
குரவார்ந்த பூஞ்சோலை வாசம் வீசுங் குடவாயில்
திருவார்ந்த கோயிலே கோயிலாகத் திகழ்ந்தீரே. 6

பாடலார் வாய்மொழியீர் பைங்கண் வெள்ளே றூர்தியீர்
ஆடலார் மாநடத்தீர் அரிவை போற்றும் ஆற்றலீர்
கோடலார் தும்பி முரன் றிசை மிழற்றுங் குடவாயில்
நீடலார் கோயிலே கோயிலாக நிகழ்ந்தீரே. 7

தொங்கார்ந்த பைங்கமலத் தயனுங் குறளாய் நிமிர்ந்தானும்
அங்காந்து தள்ளாட அழலாய் நிமிர்ந்தீர் இலங்கைக் கோன்
தங்காதல் மாமுடியும் தாளும் அடர்த்தீர் குடவாயில்
பங்கார்ந்த கோயிலே கோயிலாகப் பரிந்தீரே. 8

தூசார்ந்த சாக்கியரும் தூய்மை யில்லாச் சமணரும்
எசார்ந்த புன்மொழிநீத் தெழில் கொள் மாடக் குடவாயில்
ஆசாரம் செய்மறையோர் அளவிற் குன்றா தடி போற்றத்
தேசார்ந்த கோயிலே கேரயிலாகச் சேர்ந்தீரே. 10

நளிர்பூந் திரைமல்கு காழி ஞான சம்பந்தன்
குளிர்பூங் குடவாயிற் கோயில் மேய கோமானை
ஒளிர்பூந் தமிழ்மாலை உரைத்த பாடலிவை வல்லார்
தளர்வான தா னொழியத் தகுசீர் வானத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

உ

திருத்தணிகேசன் திருவடி துணை

அருணகிரிநாத ஸ்வாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்

வேலுமயிலும் துணை

அயிலார் மைக்கடு விழியார் மட்டைக
ளயலார் நத்திடு விலைமாதர்

அணைமீ திற்றுயில் பொழுதே தெட்க
ளவரே வற்செய்து தமியேனும்

மயலா கித்திரி வதுதா னற்றிட
மலமா யைக்குண மதுமாற

மறையால் மிக்கருள் பெறவே யற்புத
மதுமா லைப்பத மருள்வாயே:

கயிலாயப் பதியுடையா ருக்கொரு
பொருளே கட்டளை யிடுவோனே

கடலோ டிப்புகு முதுசூர் பொட்டெழ
கதிர்வேல் விட்டிடு திறலோனே

குயிலா வித்திடு பொழிலே சுற்றிய
குடவா யிற்பதி யுறைவோனே

குறமா தைப்புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் பெருமாளே. 1

சுருதி யாயிய லாயிய னீடிய
தொகுதி யாய்வெகு வாய்வெகு பாஷைகொள்
தொடர்பு மாயடி யாய்நடு வாய்மிகு துணையாய்மேல்

துறவு மாயற மாய்நெறி யாய்மிகு
விரிவு மாய்விளை வாயருள் ஞாநிகள்
சுகமு மாய்முகி லாய்மழை யாயெழு சுடர்வீசும்;

பருதி யாய்மதி யாய்நிறை தாரகை
பலவு மாய்வெளி யாயொளி யாயெழு
பகலி ராவிலை யாய்நிலை யாய்மிகு பரமா(

பரம மாயையி னேர்மையை யாவரும்
அறியொ ணாததை நீகுரு வாயிது
பகரு மாறுசெய் தாய்முத லூறு பயனோதா(

கருது மாறிரு தோள்மயில் வேலிவை
கருதொ ணாவகை யோரர சாய்வரு
கவுணி யோர்குல வேதிய னுமை கனபா(

களப பூண்முலை யூறிய பாலுணும்
மதலை யாய்மிகு பாடலின் மீறிய
கவிஞ னாய்விளை யாடிடம் வாதிகள் கழுவேற

குருதி யாறெழ வீதியெ லாமலர்
நிறைவ தாய்விட நீறிடவே செய்து
கொடிய மாறன்மெய் கூனிமி ராமுனை குலையாவ(

குடிபு கீரென மாமது ராபுரி
யியலை யாரண வூரென நேர்செய்து
குடலை மாநகர் வாழ்வுற மேவிய பெருமா(

## அருணகிரிநாதர் திருப்புகழ்

அயிலார் மைக்கடு விழியார் மட்டைக
ளயலார் நத்திடு விலைமாதர்

அணைமீ திற்றுயில் பொழுதே தெட்டிக
ளவரே வற்செய்து தமியேனும்

மயலா கித்திரி வதுதா னற்றிட
மலமா யைக்குண மதுமாற

மறையால் மிக்கருள் பெறவே யற்புத
மதுமா லைப்பத மருள்வாயே;

கயிலா யப்பதி யுடையா ருக்கொரு
பொருளே கட்டளை யிடுவோனே

கடலோ டிப்புகு முதுசூர் பொட்டெழ
கதில்வேல் விட்டிடு திறலோனே

குயிலா வித்திடு பொழிலே சுற்றிய
குடவா யிற்பதி யுறைவோனே

குறமா தைப்புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் பெருமாளே.

